2020 மார்ச் 13]

திருமதி பொன். சரஸ்வதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லி அமர்கின்றேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 91, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

91—

ஆரம்ப சுகாதார நிலையம்

52676—திரு. பி. மூர்த்தி:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட காஞ்சரம்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட காஞ்சரம்பேட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த வேண்டும் என்பது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய தொடர் கோரிக்கை. ஏற்கெனவே மதுரை மேற்கு ஒன்றியத்தில், ஊராட்சிக்கு ஒன்று என்ற அடிப்படையில் சமயநல்லூரில், தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றது. எனினும், முன்னுரிமைப் பட்டியலில் காஞ்சரம்பேட்டை பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கின்றது. ஆகவே, வருங்காலத்தில் நிதிநிலைமைக்கேற்ப காஞ்சரம்பேட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி அவர்கள்.*

[*2020 மார்ச் 13*

முற்பகல் 10—50

திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலிருந்து நத்தம் செல்லக்கூடிய சாலையில் இருக்கக்கூடிய ஒரே ஆரம்ப சுகாதார நிலையம் காஞ்சரம்பேட்டை. காஞ்சரம்பேட்டையைச் சுற்றியுள்ள வெளிச்சநத்தம், மீனாட்சிபுரம், சத்திரப்பட்டி, மஞ்சம்பட்டி, அண்டமான், கருவனூர், காவனூர், உசிலம்பட்டி, கொடிமங்கலம் மற்றும் ஊமச்சிகுளம் என ஏறத்தாழ 50 கிராமங்களுக்காக இருக்கக்கூடிய ஒரே ஆரம்ப சுகாதார நிலையம் காஞ்சரம்பேட்டை. மதுரையிலிருந்து அது 15 கிலோ மீட்டருக்கு மேல் இருக்கின்றது. மதுரை இராஜாஜி மருத்துவமனை 15 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. எனவே, பல்வேறு நோய்கள் வந்து கொண்டிருக்கும் நேரத்தில், இந்த மருத்துவமனையைத் தரம் உயர்த்தினால் நோய்களை உடனடியாக தீர்வு செய்வதற்கு வசதியாக இருக்கும். மேலும், சமயநல்லூர், சோழவந்தான் தொகுதியில் இருக்கிறது. காஞ்சரம்பேட்டையிலிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. நான் சோழவந்தான் சட்டமன்றத் தொகுதி உறுப்பினராக இருந்தபோது, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில்தான், சோழவந்தானாக இருந்தாலும் சரி, வாடிப்பட்டியாக இருந்தாலும் சரி, அலங்காநல்லூராக இருந்தாலும் சரி, சமயநல்லூராக இருந்தாலும் சரி, அவை அனைத்தும் தரம் உயர்த்தப்பட்டன. மதுரை (கிழக்கு) தொகுதியில் இதுவரை ஓர் ஆரம்ப சுகாதார நிலையம்கூட தரம் உயர்த்தப்படவில்லை. எனவே, மக்கள் வசதிக்காக, மக்களுடைய போக்குவரத்து வசதியைக் கருத்தில் கொண்டு, இந்த ஆண்டே நிச்சயமாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பழைய ஆட்சியில் நடந்தவை பற்றியெல்லாம் சொன்னார்கள். ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 5 மருத்துவர்களை நியமித்து, 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக உருவாக்க வேண்டும் என்ற திட்டத்தை,* policy*—ஐ மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா*

அவர்கள்தான் கொண்டு வந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் பிறகு வரக்கூடிய காலகட்டங்களில் தங்களுடைய ஆட்சிக் காலத்திலும் படிப்படியாக தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. மொத்தம் 385 ஒன்றியங்கள் இருக்கின்றன. ஓர் ஒன்றியத்திற்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை எடுத்து நாம் தரம் உயர்த்துகிறோம். இவற்றில், 257 ஒன்றியங்களில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன என்ற செய்தியை தாங்கள் சொன்னதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். பொதுவாக, ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும், 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைக்கும் பெரிய வித்தியாசம் ஒன்றும் இல்லை. இரண்டு மருத்துவர்கள்தான் இருப்பார்கள். இரவு நேரத்தில் மருத்துவர்களைப் பணியமர்த்தக்கூடிய வாய்ப்பு அங்கே உருவாகும். அவ்வளவுதான். மற்றபடி நீங்கள் சொல்லக்கூடிய காஞ்சரம்பேட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது. ஒரு நாளைக்கு 150 லிருந்து 200 O.P. *வருகின்றனர். 7 முதல் 10 வரை* delivery *நடக்கிறது. ஆகவே, இந்த அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இரவு நேரத்தில் மட்டும் மருத்துவர்கள் பணியில் இல்லை. இருந்தாலும் வருங்காலத்தில் தங்களுடைய கோரிக்கையை அரசு கனிவோடு முன்னுரிமை கொடுத்து பரிசீலிக்கும் என்ற நல்ல தகவலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி அவர்கள்.*

திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது ஓர் ஒன்றியத்திற்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியத்தில் இதுவரை எதுவுமே செய்யப்படவில்லையே? ஏனென்றால் சமயநல்லூர் ஏற்கெனவே செய்யப்பட்டுவிட்டது. காஞ்சரம்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரண்டு மருத்துவர்கள்தான் இருக்கிறார்கள். அதனைச் சுற்றி அதிகமான கிராமங்கள் இருக்கின்றன.* NH *நெடுஞ்சாலையாக தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. போக்குவரத்து அதிகமாக இருக்கிறது.*

கிராமங்களும் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால்தான் இரண்டு மருத்துவர்கள் இருக்கின்ற இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தித் தர வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதனை அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* M.S.R. *ராஜவர்மன் அவர்கள்.*

திரு. M.S.R. ராஜவர்மன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளால் நான், விவசாயிகளுக்காகவே நான் என வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், குடிமராமத்து நாயகன், அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்கள் நல்லாசியோடும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர், ஜல்லிக்கட்டு நாயகன், அருமை அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுடைய நல்லாசியோடும், தமிழகத்தினுடைய மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர், எங்கள் ஆருயிர் அண்ணன், திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்களுடைய நல்லாசியோடும், விருதுநகர் மாவட்டம், சாத்தூர் தொகுதியிலுள்ள மேட்டமலை ஊராட்சியில் மாவட்ட நிருவாகத்தின்மூலம் கருத்துரு அனுப்பப்பட்ட நிலையில் அங்கு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க ஆவன செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், புதிய இளம் சட்டமன்ற உறுப்பினர். ஏற்கெனவே இருந்த கோரிக்கையைச் சொல்லியிருக்கிறார். இந்த நிதியாண்டில் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மாவினுடைய அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)*